


அரியாலை பிரம்பங்குளம்
மஹாமாரி அம்மன் கோவில்

யாழ்ப்பாணம் அரியாலையைப்
பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட

# அமரர் பொன்னு இரத்தினம்

அவர்களின் சிவபதப்பேறு குறித்த

## 31ம் நாள் நினைவு மலர்

25.03.2019

உ
சிவமயம்



யாழ்ப்பாணம் அரியாலையைப்
பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட

# அமரர் பொன்னு இரத்தினம்

அவர்கள் சிவபதப்பேறு குறித்த

## 31 ஆம் நாள் நினைவு மலர்

## *25.03.2019*

# சமர்ப்பணம்

எங்கள் வாழ்வின் ஒளி விளக்காகய்
எங்கள் குடும்ப குலதெய்வமாய்
எங்கள் உயர்வையே தன் இலட்சியமாகக் கொண்டு
தன் கஷ்டங்கள் யாவையும் மறந்து
எமக்காகவே வாழ்ந்து

அன்புக்கு அணிகலனாய்
பாசத்தின் இருப்பிடமாய்
பொறுமையின் பொக்கிஷமாய்
சுமைதாங்கியாய் வாழ்ந்து

அணையாத் தீபமாய் சுடர் வீசும்
மறைந்தும் மறையாத எம் அன்புத் தெய்வத்தின்
இனிய நினைவுகளை எங்களின் உதிரங்களில்
சுமந்தவண்ணம்,
ஐயா! உங்கள் ஆத்மா சாந்திபெற இறைவனை
பிரார்த்தித்துக் கொண்டு இம்மலரை உங்கள்
பாதக் கமலத்தில் சமர்ப்பிக்கின்றோம்.


ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

குடும்பத்தினர்



உ

சிவமயம்



மலர்வு
19 . 10 . 1929

உதிர்வு
23 . 02 . 2019

அமரர்

# பொன்னு இரத்தினம்

**திதி வெண்பா**

ஆண்டு விளம்பிவருட ஆனதமிழ் மாசித்திங்கள்
சீர்நல்லபர பக்கச் சிறப்புறு சதுர்த்தியிலே
மாண்பார் இரத்தினம் மண்ணக வாழ்வுறுத்து
சேர்ந்தார் சிவனடியைச் சிறந்து

# பஞ்ச புராணம்

உ

சிவமயம்

## விநாயகர் துதி

ஐந்து கரத்தனை ஆனை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன் தனை ஞானக் கொழுந்தினை
புந்தியில் வைத்து அடி போற்று கின்றேனே

- திருமூலர் -

திருச்சிற்றம்பலம்

## தேவாரம்

மாதர்ப் பிறைக் கண்ணியானை மலையான்
மகளோடும் பாடிப்
போதொடு நீர்சுமந் தேத்திப்
புகுவா ரவர்பின் புகுவேன்
யாதுஞ் சுவடுப டா மல் ஐயா
றடைகின்ற போது
காதன் மடப்பிடி யோடுங்
களிறு வருவன கண்டேன்
கண்டேனவர் திருப்பாதங்
கண்டறியாதன கண்டேன்

## திருவாசகம்

மெய்தான் அரும்பி விதிர் விதிர்த்து
உன் விரை ஆர் சுழற்கு என்
கைதான் தலை வைத்துக் கண்ணீர்
ததும்பி வெதும்பி உள்ளம்
பொய்தான் தவிர்ந்து உன்னைப் போற்றி
சய சய போற்றி என்னும்
கைதான் நெகிழ விடேன் உடையாய்
என்னைக் கண்டு கொள்ளே.

## திருவிசைப்பா

நீறணி பவளக் குன்றமே நின்ற
நெற்றிக் கண்ணுடையதோர் நெருப்பே
வேறணி புவனபோகமே யோக
வெள்ளமே மேருவில் வீரா
ஆறணி சடையெம் அற்புதக் கூத்தா
அம்பொன்செய் அம்பலத் தரசே
ஏறணி கொடியேம் ஈசனே உன்னைத்
தொண்டனே இசையுமா றிசையே

## திருப்பல்லாண்டு

சீரும் திருவும் பொலியச்
சிவலோக நாயகன் சேவடிக் கீழ்
ஆரும் பெறாத அறிவு பெற்றேன்
பெற்றார் பெறுவாருலகில்
ஊரும் உலகும் கழற
உழறி உமைமண வாளனுக்காட்
பாரும் விசும்பும் அறியும் பரிசு
நாம் பல்லாண்டு கூறுதுமே

## திருப்புராணம்

ஐந்து பேரறிவும் கண்களே கொள்ள
அளப்பருங் கரணங்கள் நான்கும்
சிந்தையே யாகக் குணமொரு மூன்றும்
திருந்துசாத் துவிகமே யாக
இந்துவாழ் சடையான் ஆடு மானந்த
எல்லையில் தனிப் பெருங் கூத்தின்
வந்தபே ரின்ப வெள்ளத்துள் திளைத்து
மாறிலா மகிழ்ச்சியின் மலர்ந்தார்

## திருப்புகழ்

முத்தைத்தரு பத்தித் திருநகை
அத்திக்கிறை சத்திச் சரவண
முத்திக்கொரு வித்துக் குருபர ...... எனவோதும்
முக்கட்பர மற்குச் சுருதியின்
முற்பட்டது கற்பித் திருவரும்
முப்பத்துமு வர்க்கத் தமரரும் ...... அடிபேணப்
பத்துத்தலை தத்தக் கணைதொடு
ஒற்றைக்கிரி மத்தைப் பொருதொரு
பட்டப்பகல் வட்டத் திகிரியில் ...... இரவாகப்
பத்தற்கிர தத்தைக் கடவிய
பச்சைப்புயல் மெச்சத் தகுபொருள்
பட்சத்தொடு ரட்சித் தருள்வதும் ...... ஒருநாளே
தித்தித்தெய ஒத்தப் பரிபுர
நிர்த்தப்பதம் வைத்துப் பயிரவி
திக்கொட்கந டிக்கக் கழுகொடு ...... கழுதாடத்
திக்குப்பரி அட்டப் பயிரவர்
தொக்குத்தொகு தொக்குத் தொகுதொகு
சித்ரப்பவு ரிக்குத் த்ரிகடக ...... எனவோதக்
கொத்துப்பறை கொட்டக் களமிசை
குக்குக்குகு குக்குக் குகுகுகு
குத்திப்புதை புக்குப் பிடியென ...... முதுகூகை
கோட்புற்றெழ நட்பற் றவுணரை
வெட்டிப்பலி யிட்டுக் குலகிரி
குத்துப்பட ஒத்துப் பொரவல ...... பெருமாளே.

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்க மன்னர்
கோன்முறை அரசுசெய்க குறைவிளா துயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்

# அமரர் பொன்னு இரத்தினம் அவர்களின் வாழ்க்கை வரலாறு

ஈழ மணித் திருநாட்டின் யாழ்ப்பாணப் பகுதியில் உள்ள பசுமை நிறைந்த கல்வியும் செல்வமும் தழைத்தோங்கும் எழில் பொங்கும் அரியாலை ஊரில் உயர்குல வேளான் மரபில் அன்பும் அறனும் பண்பும் ஒருங்கமைந்து வாழ்ந்த அமரர்களாகிய பொன்னு - பொன்னம்மா தம்பதிகளுக்கு **1929** ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் **19** ஆம் திகதி தலைமகனாக உதித்தவர் தான் இரத்தினம் அவர்கள். காலஞ் சென்றவர்களான மயில்வாகனம், பரமேஸ்வரி, அன்னலட்சுமி ஆகியோர் இவரின் அருமைச் சகோதரர்கள் ஆவர்.

இவர் தனது ஆரம்பக் கல்வியை அரியாலை ஸ்ரீ பார்வதி வித்தியாசாலையில் கற்றுவரும் வேளையில் குடும்பத்தின் மூத்தமகனாக இருந்தமையினால் தனது வீட்டுப் பொறுப்புக்கள் காரணமாக தனது கல்வியை எட்டாம் வகுப்புடன் நிறுத்திவிட்டு தொழில் பயிலத் தொடங்கினார். சாரதித் தொழிலில் நல்ல முன்னேற்றம் கண்டார். அவருடைய சாரதித் தொழிலில் கடமை, கண்ணியம், கட்டுப்பாட்டுடன் ஈடுபட்டமையால் யாழ்ப்பாணத்தில் பிரபல்யமான (முகமதலி அப்துலலி) யாழ் - கொழும்பு பொருட்கள் பரிமாற்றம் செய்யும் லொறிக் கம்பனியில் சாரதியாகக் கடமை புரிந்தார்.

தனது சகோதரர் சகோதரிகளுக்கும் நல்வாழ்க்கை அமைத்துக் கொடுத்து இன்புற்றார்.

இவ்வாறிருக்கையில் தனது **26** ஆவது வயதில் யாழ்ப்பாணப் பெருநிலப் பரப்பில் சப்தத் தீவுகளில் ஒன்றாக விளங்கும் நெடுந்தீவு மேற்கைச் சேர்ந்த நாகநாதன் - சின்னத்தங்கம் தம்பதியினரின் கடைசி மகள் அன்னம்மாவை வாழ்க்கைத் துணையாக்கினார். அன்னம்மா இரத்தினத்திற்கு அன்னம் போல் வாய்க்கப் பெற்றார். இவர்களின் இல்லற வாழ்க்கையின் பேறாக கமலாவதி, கிருஷ்ணானந்தன், ரவீந்திரன், ராஜேந்திரன், கமலேந்திரன், சுஜிகரன், காலஞ்சென்ற பபிகரன், ரஜிகரன், தனுஜா ஆகியோரைப் பிள்ளைச் செல்வங்களாகப் பெற்றார். இவர் தனது பிள்ளைகளை பிரபல பாடசாலைகளில் கல்விகற்க வைத்து

உயர்வடையச்செய்து இல்லற வாழ்க்கையையும் அமைத்துக் கொடுத்து இன்புற்றார். இவரின் மருமக்களாக காலஞ்சென்ற வன்னியசிங்கம் மற்றும் ஜெயந்தினி, வாசுகி, நந்தினி, கிருஷாந்தி, சபறினா, முகுந்தன், ஆகியோரை அடையப் பெற்றிருந்தார்.

அமரர் இரத்தினம் அவர்கள் இல்லறத்தில் மட்டுமல்லாது தனது குல தெய்வமான அரியாலை பிரப்பங்குளம் மஹாமாரி அம்மன் ஆலயத்தின் கருமங்களையும் கண்ணும் கருத்துமாகச் செய்து வந்தார். அவருடைய பிள்ளைகளின் இல்லறப் பயனாக மீறுஜா, யதீசன், நிஷாந்தன், தேனுகா, பவித்திரா, கோகுலன், கோபிகன், பிரதீப், சுவேதா, கௌதமன், சுருதி, லக்ஸ்மன், மதுஷா, விதுஷன், பபிஷன், அக்ஷயன், சஸ்கியா, தலின், மித்தின், யதுஷா, கேஷிகா, அதிஷன் ஆகியோரை பேரப்பிள்ளைகளாக அடையப் பெற்று இன்புற்றிருந்தார்.

இவ்வாறிருக்கையில் 1997 ஆம் ஆண்டு தனது மனைவியை இழந்து மிகவும் வேதனையுடன் வாழ்ந்து வந்தார். பின்பு லண்டன், நோர்வே ஆகிய நாடுகளுக்குச் சென்று பிள்ளைகளுடனும், பேரப் பிள்ளைகளுடனும் மகிழ்வுற்றார். 2016 ஆம் ஆண்டு வழி மாறிச் சென்று சிறிது நாட்கள் காணாமல் போயிருந்தார். பின் பிள்ளைகளின் முயற்சியாலும் அவர் நம்பிய தெய்வங்களாலும் திரும்பக் கிடைக்கப் பெற்று தனது வீட்டில் தன் விருப்பப்படி இருந்துவரும் வேளையில் அவரின் பூட்டப் பிள்ளைகளாக தீபிகா, ஷானிகா, சஸ்வின், விஸ்மிகா, ஹறிஷன், தருணிகா, ஜெசிக்கா ஆகியோரைக் கண்டு இன்புற்றிருந்தார். எந்நேரமும் சிரித்த முகத்துடன் இருந்த இவருக்கு கடந்த நான்கு மாதங்களாக நடக்க முடியாமல் படுக்கையிலிருந்தார். அவ்வேளையிலும் பிள்ளைகளுடனும் பெறாமக்களுடனும் பேரப்பிள்ளைகளுடனும் சந்தோஷமாக இருந்த வேளையில் 2019 ஆம் ஆண்டு மாசி மாதம் 23 ஆம் திகதி சனிக்கிழமை பகல் 1.30 மணியளவில் தனது 89 ஆவது வயதில் பிள்ளைகள், பெறாமக்கள் யாவரையும் கதறி அழ வைத்த விட்டு திடீரென மீளாத்துயில் கொண்டார்.

எங்கள் குடும்ப விளக்காய் விளங்கிய அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்போமாக.

ஓம் சாந்தி! சாந்தி !! சாந்தி !!!

# பெண் பிள்ளைகள் புலம்பல்

உங்கள் பெண்பிள்ளைகளை மிகுந்த அன்புடனும் பாசத்துடனும் ஒழுக்கத்துடனும் வளர்த்து ஆளாக்கினீர்கள் ஐயா எங்கள் வாழ்க்கை நல்ல நிலைக்கு வரவேண்டும் என்று அரும்பாடு பட்டீர்கள். நாங்கள் அம்மாவின் பாசத்தையும் அன்பையும் இழந்து பரிதவித்த வேளை நீங்கள் எங்களுக்குப் பெரும் உறுதுணையாகவும் ஆறுதலாகவும் இருந்தீர்கள் ஐயா! நீங்கள் வீட்டில் நடந்து திரிவதும், உங்கள் சிரித்த முகமும் எந்நேரமும் எங்கள் கண்முன் வந்து போகின்றது! எங்கள் வீடே வெறிச் சோடிவிட்டது. அம்மாவையும் உங்களையும் இழந்து அனாதைகளாக நிற்கிறோம் ஐயா. உங்களுடைய ஆத்மா சாந்தி அடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**விழிகசிந்து உங்கள் பிரிவால் வாடும்**
**பெண் பிள்ளைகள்**
**சந்திரா, தனுஜா**

# ஆண் பிள்ளைகள் புலம்பல்

எங்களை மிகவும் கண்டிப்புடன் வளர்த்தீர்கள். உங்கள் கண்டிப்பால் பண்புடனும், ஒழுக்கத்துடனும் வாழ வழிவகுத்தீர்கள் ஐயா. அம்மாவின் அரவணைப்பின்றி வாழ்ந்த எங்களுக்கு நீங்கள் பெரும் துணையாக நின்றீர்கள். உங்கள் கடமைகளை செவ்வனே செய்தீர்கள். நீங்கள் படுக்கையில் இருந்தபோதும் எங்களை மாறி மாறிப் பார்த்து உங்கள் கண்களும் சிரிப்பும் ஏதோ கூறியது! உங்களுக்கு வாயால் ஒன்றும் சொல்ல முடியாமல் போய்விட்டது. அதுதான் சாதகமாகி விட்டது ஐயா! உங்கள் நினைவுகள் எங்களை விட்டு அகலாது. உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல மகாமாரி அம்மனைப் பிரார்த்திக்கின்றோம்.

**உங்கள் ஆண்பிள்ளைகள்**
**ஆனந்தன், றவி, ராஜன்,**
**இந்திரன், சுஜி, மணி.**

# மருமக்கள் புலம்பல்

மருமக்கள் எங்களை அன்புடன் ஏற்று மகிழ்வுடன் பழகி ஆறுதல் தந்தீர்கள் ஐயா! மருமக்கள் என்று எண்ணாமல் உங்கள் பிள்ளைகள் போல் எங்களையும் வழிநடத்தினீர்கள். நாங்களும் உங்கள் மேல் வைத்த பாசத்தினால் ஐயா, ஐயா என்று அன்புடன் அழைத்தோம். உங்களுடன் நீண்ட காலம் அருகில் இல்லாவிட்டாலும் உங்களில் நாங்கள் வைத்த அன்பும் பாசமும் என்றும் அழியாது. நீங்கள் படுக்கையில் இருந்த பொழுது கூட உங்களின் புன்சிரிப்பும் பார்வையும் எங்களை விட்டு அகலவில்லை. உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**உங்கள் மருமக்கள்**
**ஜெயந்தி, வாசுகி, நந்தினி,**
**கிருஷாந்தி, சபறினா, முகுந்தன்**

# பேரப்பிள்ளைகள் புலம்பல்

ஐயா! நீங்கள் எங்களுக்குத் தாத்தா என்றாலும் நாங்கள் உங்களை ஐயா என்றுதான் அழைத்தோம். நீங்கள் இவ்வுலகில் இல்லை என்பதை எங்கள் மனம் ஏற்க மறுக்கின்றது. ஒவ்வொரு தடவையும் உங்களைப் பார்க்க வரும் பொழுதும் ஆவலுடன் ஓடி வருவோம். எங்களைக் கண்டவுடன் கண் கலங்கி கட்டிப்பிடித்து முத்தம் தருவீர்கள். நீங்கள் எங்களுடன் கதைக்க முடியாவிட்டாலும் நாங்கள் செய்யும் குறும்புகளுக்கெல்லாம் தலையாட்டுவீர்கள். இனி நாங்கள் வரும்போது நீங்கள் இல்லையே! என்று நினைக்கும் போது மனம் ஏங்கித்தவிக்கின்றது. இனி எப்பிறவில் உங்களைக் காண்போம்.

**மீறு, யதி, நிஷாந், தேனு, பவித்திரா**
**கோகுலன், கோபிகன், பிரதீப், சுவேதா,**
**கௌதமன், சுருதி, லக்ஸ்மன், மது,**
**விது, பமி, அக்ஷயன், சஸ்சியா, தவின்,**
**மித்தின், யது, கேஷி, பபி**

# பெறாமக்கள் புலம்பல்

*சின்னையா என்றாலும் ஐயா*
*என உரிமையோடு அழைத்தோம்.*
*இனி நாங்கள் யாரை அழைப்பது ஐயா*
*எந்நேரமும் சிரித்த முகத்துடன் இருப்பீர்களே*
*நோய் வாய்ப்பட்டிருக்கையில் கூட உங்கள் உடல் வலிகளை*
*காட்டிக் கொள்ளாது சிரித்தபடி இருப்பீர்களே*
*நாங்கள் செய்யும் ஒவ்வொரு செயல்களையும்,*
*கண்ணும் கருத்துமாக பார்த்து கொண்டி இருப்பீர்களே*
*இப்போது சிரிப்பதற்கும் பார்ப்பதற்கும் இல்லாமல்*
*எமை விட்டு சென்று விட்டீர்களே....*
*சுற்றும் முற்றும் பார்த்தீர்கள், எங்களையும் பார்த்தீர்கள்*
*அப்படியே கண்ணை மூடி வீட்டீர்களே*
*உங்கள் ஆத்மா சாந்தியடைய பிரப்பங்குளம்*
*மகாமாரி அம்மனை வேண்டுகின்றோம்.*

**பிரிவால் துயருறும்**
**பெறாமக்கள்**

# May rest in peace with Appapa

We will always treadure the memories of all good times we had together appapa. When you came to London in 2009 and spend with us on the Special day to celebrate pongal and you used to ran and play around with baby sakya with your caring heart and special smile and came to our birthday and explore the city of Londan too. Our Appapa will be always in our heart and his watching us tith Our Appapa with his smile in his face. He Still keeping an eye all of us so let's make sure he like what he sees. We will always remember you Appapa. because their will never be another one of replace you in our heart and the love will always have for you. His smile was made of Sunshine may rest in peace with Appapa.

**Akshyan,Saskya,**
**Talin, Baby - Metyn**

# மாணிக்க வாசகர் அருளிய திருவாசகம்

## வெண்பா

தொல்லை யிரும்பிறவிச் சூழுந் தளைநீக்கி
அல்லலறுத் தானந்தம் ஆக்கியதே - எல்லை
மருவா நெறியளிக்கும் வாதவூரெங்கோன்
திருவாசகமெனுந் தேன்.

நமச்சிவாய வாழ்க! நாதன்தாள் வாழ்க!
இமைப்பொழுதும் என்நெஞ்சில் நீங்காதான் தாள் வாழ்க!
கோகழி ஆண்ட குருமணிதன் தாள் வாழ்க!
ஆகமம் ஆகிநின்று அண்ணிப்பான் தாள் வாழ்க!
ஏகன் அநேகன் இறைவன் அடிவாழ்க!

வேகம் கொடுத்துஆண்ட வேந்தன் அடிவெல்க!
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன் தன் பெய்கழல்கள் வெல்க!
புறத்தார்க்குச் சேயோன்தன் பூங்கழல்கள் வெல்க!
கரங்குவிவார் உள்மகிழும் கோன்கழல்கள் வெல்க!
சிரங்குவிவார் ஓங்குவிக்கும் சீரோன் கழல்வெல்க!

ஈசன் அடிபோற்றி! எந்தை அடிபோற்றி!
தேசன் அடிபோற்றி! சிவன்சே வடிபோற்றி!
நேயத்தே நின்ற நிமலன் அடிபோற்றி!
மாயப் பிறப்பறுக்கும் மன்னன் அடிபோற்றி!
சீரார் பெருந்துறைநம் தேவன் அடிபோற்றி!

ஆராத இன்பம் அருளும் மலைபோற்றி!
சிவன் அவன் என்சிந்தையுள் நின்ற அதனால்
அவன்அரு ளாலே அவன் தாள் வணங்கிச்
சிந்தை மகிழச் சிவபுராணம் தன்னை
முந்தை வினைமுழுதும் ஓய உரைப்பன்யான்

கண்ணுதலான் தன்கருணைக் கண்காட்ட வந்தெய்தி
எண்ணுதற்கு எட்டா எழில்ஆர் கழல்இறைஞ்சி,
விண்நிறைந்து மண்நிறைந்து மிக்காய் விளங்கொளியாய்
எண்இறந்து எல்லை இலாதானே! நின்பெருஞ்சீர்
பொல்லா வினையேன் புகழுமாறு ஒன்றறியேன்!

புல்ஆகிப் பூடாகிப் புழுவாய் மரம்ஆகிப்
பல்விருகம் ஆகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்அசுரர் ஆகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லாஅ நின்றஇத் தாவர சங்கமத்துள்

எல்லாப் பிறப்பும் பிறந்து இளைத்தேன், எம்பெருமான்!
மெய்யேஉன் பொன் அடிகள் கண்டின்று வீடுற்றேன்
உய்யஎன் உள்ளத்துள் ஓங்காரமாய் நின்ற
மெய்யா! விமலா! விடைப்பாகா! வேதங்கள்
ஐயா! என ஓங்கி ஆழ்ந்தகன்ற நுண்ணியனே!

வெய்யாய், தணியாய், இயமான னாம்விமலா!
பொய்யாயின எல்லாம் போய்அகல வந்தருளி,
மெய்ஞ்ஞானம் ஆகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே!
எஞ்ஞானம் இல்லாதேன் இன்பப் பெருமானே!
அஞ்ஞானம் தன்னை அகல்விக்கும் நல்லறிவே!

ஆக்கம் அளவிஇறுதி இல்லாய்! அனைத்துலகும்
ஆக்குவாய் காப்பாய் அழிப்பாய் அருள் தருவாய்!
போக்குவாய் என்னைப் புகுவிப்பாய் நின்தொழும்பின்
நாற்றத்தின் நேரியாய்! சேயாய் நணியானே!
மாற்றம் மனம்கழிய நின்ற மறையோனே!

கறந்தபால் கன்னலொடு நெய்கலந்தாற் போலச்
சிறந்து அடியார் சிந்தனையுள் தேன்ஊறி நின்று
பிறந்த பிறப்பு அறுக்கும் எங்கள் பெருமான்!
நிறங்கள் ஓர் ஐந்து உடையாய்! விண்ணோர்கள் ஏத்த
மறைந்திருந்தாய் எம்பெருமான்! வல்வினையேன் தன்னை

மறைந்திட மூடிய மாய இருளை
அறம்பாவம் என்னும் அருங்கயிற்றால் கட்டிப்
புறந்தோல் போர்த்துஎங்கும் புழுஅழுக்கு மூடி
மலம்சோரும் ஒன்பது வாயிற் குடிலை
மலங்கப் புலன் ஐந்தும் வஞ்சனையைச் செய்ய

விலங்கும் மனத்தால் விமலா! உனக்குக்
கலந்த அன்பாகிக் கசிந்துஉள் உருகும்
நலம்தான் இலாத சிறியேற்கு நல்கி
நிலந்தன்மேல் வந்தருளி நீள்கழல்கள் காட்டி,
நாயிற் கடையாய்க் கிடந்த அடியேற்குத்

தாயிற் சிறந்த தயாஆன தத்துவனே!
மாசஅற்ற சோதி மலர்ந்த மலர்ச்சுடரே!
தேசனே! தேன்ஆர் அமுதே! சிவபுரனே!
பாசமாம் பற்றுஅறுத்துப் பாரிக்கும் ஆரியனே!
நேச அருள்புரிந்து நெஞ்சில் வஞ்சகம் கெடப்

பேராது நின்ற பெருங்கருணைப் பேராறே!
ஆரா அமுதே! அளவுஇலாப் பெம்மானே!
ஓராதார் உள்ளத்து ஒளிக்கும் ஒளியானே!
நீராய் உருக்கிஎன் ஆருயிராய் நின்றானே!
இன்பமும் துன்பமும் இல்லானே, உள்ளானே!

அன்பருக்கு அன்பனே! யாவையுமாய் அல்லையுமாய்
சோதியனே, துன்இருளே! தோன்றாப் பெருமையனே!
ஆதியனே! அந்தம் நடுவாகி அல்லானே!
ஈர்த்துஎன்னை ஆட்கொண்ட எந்தை பெருமானே!
கூர்த்தமெய்ஞ் ஞானத்தால் கொண்டுணர்வார் தம்கருத்தின்

நோக்கரிய நோக்கே! நுணுக்கரிய நுண்ணுணர்வே!
போக்கும் வரவும் புணர்வும் இலாப் புண்ணியனே!
காக்கும்எம் காவலனே! காண்பரிய பேரொளியே!
ஆற்றுஇன்ப வெள்ளமே! அத்தா! மிக்காய் நின்ற
தோற்றச் சுடர்ஒளியாய்ச் சொல்லாத நுண்ணுணர்வாய்

மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்தறிவாம்
தேற்றனே! தேற்றத் தெளிவே! என் சிந்தனையுள்
ஊற்றான உண்ஆர் அமுதே, உடையானே!
வேற்று விகார விடக்கு உடம்பின் உள் கிடப்ப
ஆற்றேன் எம்ஐயா! அரனே! ஓ என்றென்று

போற்றிப் புகழ்ந்து இருந்து பொய்கெட்டு மெய்யானார்
மீட்டு இங்கு வந்து வினைப்பிறவி சாரமே,
கள்ளப் புலக்குரம்பைக் கட்டுஅழிக்க வல்லனே!
நள்இருளில் நட்டம் பயின்றுஆடும் நாதனே!
தில்லையுள் கூத்தனே! தென்பாண்டி நாட்டானே!

அல்லல் பிறவி அறுப்பானே! ஓ என்று
சொல்லற்கு அரியானைச் சொல்லித் திருவடிக்கீழ்ச்
சொல்லிய பாட்டின் பொருள்உணர்ந்து சொல்லுவார்,
செல்வர் சிவபுரத்தின் உள்ளார் சிவன் அடிக்கீழ்ப்
பல்லோரும் ஏத்தப் பணிந்து.

# அம்மன் பாடல்கள்

ஜெயஜெய தேவி ஜெயஜெய தேவி துர்கா தேவி சரணம்
ஜெயஜெய தேவி ஜெயஜெய தேவி துர்கா தேவி சரணம்
துர்கையம்மனை துதித்தால் என்றும்
துன்பம் பறந்தோடும்
தர்மம் காக்கும் தாயும் அவளே
தரிசனம் கண்டால் போதும்
கர்ம வினைகளும் ஓடும்
சர்வ மங்களம் கூடும் (ஜெய ஜெய)

பொற்கரங்கள் பதினெட்டும்
நம்மை சுற்றி வரும் பகை விரட்டும்
நெற்றியிலே குங்கும பொட்டும்
வெற்றி பாதையைக் காட்டும்
ஆயிரம் கரங்கள் உடையவளே
ஆதி சக்தி அவள் பெரியவளே
ஆயிரம் நாமங்கள் கொண்டவளே
தாய்போல் நம்மைக் காப்பவளே (ஜெய ஜெய)
சங்கு சக்கரம் வில்லும் அம்பும்
மின்னும் வாளும் வேலுடன் சூலமும்
தங்க கைகளில் தாங்கி நிற்பாள் அம்மாதா
சிங்கத்தின் மேல் அவள் வீற்றிருப்பாள்
திங்களை முடிமேல் சூடி நின்பாள்
மங்கள வாழ்வும் தந்திடுவாள்
மங்கையர்க்கரசியும் அவளே
அங்கையர்கண்ணியும் அவளே (ஜெய ஜெய)

# மங்கள ரூபணி

மங்கள ரூபிணி மதியொளி சூலினி மன்மத பாணியளே
சங்கடம் நீங்கிடச் சடுதியில் வந்திடும் சங்கரி சவுந்தரியே
கங்கண பாணியன் கனிமுகம் கண்டநல் கற்பகக் காமினியே
ஜெயஜெய சங்கரி கவுரி கிருபாகரி துக்க நிவாரணி காமாட்சி
கானுறு மலரெனக் கதிர்ஒளி காட்டிக் காத்திட வந்திடுவாள்
தானுறு தவஒளி தாரொளி மதியொளி தாங்கியே வீசிடுவாள்
மானுறு விழியால் மாதவர் மொழியாள் மாலைகள் சூடிடுவாள்
ஜெயஜெய சங்கரி கவுரி கிருபாகரி துக்க நிவாரணி காமாட்சி
சங்கரி சவுந்தரி சதுர்முகன் போற்றிட சபையினில் வந்தவளே
பொங்கரி மாவினில் பொன்னடி வைத்துப் பொருந்திட வந்தவளே
எம்குலம் தழைத்திட எழில்வடி வுடனே எழுந்தநல் துர்க்கையளே
ஜெயஜெய சங்கரி கவுரி கிருபாகரி துக்க நிவாரணி காமாட்சி
தணதண தந்தண நவிலொளி முழங்கிட தண்மதி நீ வருவாய்
கணகண கங்கண கதிர்ஒளி வீசிட கண்மணி நீ வருவாய்
பணபண பம்பண பறையொலி கூவிட பண்மணி நீ வருவாய்
ஜெயஜெய சங்கரி கவுரி கிருபாகரி துக்க நிவாரணி காமாட்சி
பஞ்சமி பைரவி பர்வத புத்திரி பஞ்சநல் பாணியளே்
கொஞ்சிடும் குமரனைக் குணமிகு வேழனைக் கொடுத்தநல் குமரியளே
சங்கடம் தீர்த்திட சமரது செய்தநற் சக்தியெனும் மாயே
ஜெயஜெய சங்கரி கவுரி கிருபாகரி துக்க நிவாரணி காமாட்சி
எண்ணிய படிநீ யருளிட வருவாய் எங்குல தேவியளே்
பண்ணிய செயலின் பலனது நலமாய்ப் பல்கிட அருளிடுவாய்
கண்ணொளி யதனால் கருணையே காட்டிக் கவலைகள் தீர்ப்பவளே
ஜெயஜெய சங்கரி கவுரி கிருபாகரி துக்க நிவாரணி காமாட்சி
இடர்தரு தொல்லை இனிமேல் இல்லை யென்றுநீ சொல்லிடுவாய்
சுடர்தரு அமுதே சுருதிகள் கூறிச் சுகமது தந்திடுவாய்
படர்தரு இருளில் பரிதியாய் வந்து பழவினை ஓட்டிடுவாய்
ஜெயஜெய சங்கரி கவுரி கிருபாகரி துக்க நிவாரணி காமாட்சி
ஜெயஜெய பாலா சாமுண் டீஸ்வரி ஜெயஜெய ஸ்ரீதேவி
ஜெயஜெய துர்க்கா ஸ்ரீபர மேஸ்வரி ஜெயஜெய ஸ்ரீதேவி
ஜெயஜெய ஜெயந்தி மங்கள காளி ஜெயஜெய ஸ்ரீதேவி
ஜெயஜெய சங்கரி கவுரி கிருபாகரி துக்க நிவாரணி காமாட்சி

# சகலகலாவல்லி மாலை



வெண்டா மரைக்கன்றி நின்பதந்
தாங்கவென் வெள்ளையுள்ளத்
தண்டா மரைக்குத் தகாதுகொ
லோசக மேழுமளித்
துண்டா னுறங்க வொழித்தான்பித்
தாகவுண் டாக்கும்வண்ணம்
கண்டான் சுவைகொள் கரும்பே
சகல கலாவல்லியே

நாடும் பொருட்சுவை சொற்சுவை
தோய்தர நாற்கவியும்
பாடும் பணியிற் பணித்தருள்
வாய்பங்க யாசனத்திற்
கூடும் பசும்பொற் கொடியே
கனதனக் குன்றுமைம்பாற்
காடுஞ் சுமக்குங் கரும்பே
சகல கலாவல்லியே.

அளிக்குஞ் செழுந்தமிழ்த் தெள்ளமு
தார்ந்துன் னருட்கடலிற்
குளிக்கும் படிக்கென்று கூடுங்கொ
லோவுளங் கொண்டுதெள்ளித்
தெளிக்கும் பனுவற் புலவோர்
கவிமழை சிந்தக்கண்டு
களிக்குங் கலாப மயிலே
சகல கலாவல்லியே.

தூக்கும் பனுவற் றுறைதோய்ந்த
கல்வியுஞ் சொற்சுவைதோய்
வாக்கும் பெருகப் பணித்தருள்
வாய்வட நூற்கடலும்
தேக்குஞ் செழுந்தமிழ்ச் செல்வமுந்
தொண்டர்செந் நாவினின்று
காக்குங் கருணைக் கடலே
சகல கலாவல்லியே.

பஞ்சப் பிதந்தரு செய்யபொற்
பாதபங் கேருகமென்
நெஞ்சத் தடத்தல ராததென்
னேநெடுந் தாட்கமலத்
தஞ்சத் துவச முயர்த்தோன்செந்
நாவு மகமும்வெள்ளைக்
கஞ்சத் தவிசொத் திருந்தாய்
சகல கலாவல்லியே.

பண்ணும் பரதமுங் கல்வியுந்
தீஞ்சொற் பனுவலும்யான்
எண்ணும் பொழுதெளி தெய்தநல்
காயெழு தாமறையும்
விண்ணும் புவியும் புனலுங்
கனலும்வெங் காலுமன்பார்
கண்ணுங் கருத்தும் நிறைந்தாய்
சகல கலாவல்லியே.

பாட்டும் பொருளும் பொருளாற்
பொருந்தும் பயனுமென்பாற்
கூட்டும் படிநின் கடைக்கணல்
காயுளங் கொண்டுதொண்டர்
தீட்டுங் கலைத்தமிழ்த் தீம்பா
லமுதந் தெளிக்கும்வண்ணம்
காட்டும்வெள் ளோதிமப் பேடே
சகல கலாவல்லியே.

சொல்விற் பனமு மவதான
முங்கவி சொல்லவல்ல
நல்வித்தை யுந்தந் தடிமைகொள்
வாய்நளி னாசனஞ்சேர்
செல்விக் கரிதென் றொருகால
முஞ்சிதை யாமைநல்கும்
கல்விப் பெருஞ்செல்வப் பேறே
சகல கலாவல்லியே.

சொற்கும் பொருட்கு முயிராமெய்ஞ்
ஞானத்தின் தோற்றமென்ன
நிற்கின்ற நின்னை நினைப்பவர்
யார்நிலந் தோய்புழைக்கை
நற்குஞ் சரத்தின் பிடியோ
டரசன்ன நாணநடை
கற்கும் பதாம்புயத் தாயே
சகல கலாவல்லியே.

மண்கண்ட வெண்குடைக் கீழாக
மேற்பட்ட மன்னருமென்
பண்கண் டளவிற் பணியச்செய்
வாய்படைப் போன்முதலாம்
விண்கண்ட தெய்வம்பல் கோடியுண்
டேனும் விளம்பிலுன்போற்
கண்கண்ட தெய்வம் உளதோ
சகல கலாவல்லியே.

# தேவி விரதம்

## கேதார கௌரி விரதம்

இவ்விரதம் புரட்டாதி மாத வளர்பிறை அட்டமித் திதியில் ஆரம்பமாகி ஐப்பசி மாதத் தேய்பிறைச் சதுர்த்தசியில் முடிவுறுகின்றது. இருபத்தொரு நாட்களைக் கொண்ட மஹோன்னத விரதம் இதுவாகும். உமாதேவியார் சிவனை நோக்கி பூஜை செய்து அர்த்தநாரீஸ்வரப் பேற்றினைப் பெற்ற விரதமாகையால் இது கேதாரகௌரி விரதம் எனச் சொல்லப்பட்டது. மணமாகாத கன்னிப் பெண்கள் நல்ல மாங்கல்ய வாழ்வை வேண்டியும் மணமாகிய பெண்கள் தங்கள் மாங்கல்யம் தொடர்ந்தும் மங்களமாக இருக்க வேண்டியும் இவ்விரதம் நோற்பர். விரதம் ஆரம்பமான நாளிலிருந்து இருபத்தொரு இழைகளைக் கொண்ட நூலில் நாள்தோறும் ஆரம்பமான நாளிலிருந்து இருபத்தொரு இழைகளைக் கொண்ட நூலில் நாள்தோறும் ஒவ்வொரு முடிச்சாக இட்டு இறுதி நாளன்று அந்நூலை கோயில் குருக்களைக் கொண்டு ஆண்கள் தமது வலது கையிலும் பெண்கள் இடது கையிலும் அணிந்து கொள்வர்.

### விநாயகர் துதி

முன்னின்று செய்யுள் முறையாய்ப் புனைவதற்கு
என்னின் றருள்செய் எலிவா கனப்பிள்ளாய்
சொற்குற்ற மொடு பொருட்குற்றம் சோர்வு தரும்
எக்குற்றமும் வாராமற்கா.

### வேண்டுதற் கூறு

காப்பெடுக்க வந்தேனே கௌரியம்மாள் தாயாரே
காத்தென்னைத் தேற்றிடுவாய் காளிமகா தேவியரே
காலமெல்லாம் நன்னரிய காப்பெடுத்தே வாழ்ந்திடுவேன்
எண்ணும் கருமம் இனிதாக முடித்திடுவாய்
பண்ணும் வினையாவும் பனிபோலப் போக்கிடுவாய்
உண்ணும் உணவாக உயிரினுக் குயிராக
என்றும் இருந்தே எனைக்காத்து வந்திடுவாய்
காடும் கடந்துவந்தேன் மலையும் கடந்து வந்தேன்
காளிமகா தேவியரே காப்பெனக்குத் தந்திடுவாய்

சூலம் கொண்டவளே சுந்தர முகத்தவளே
அரியை உடையவளே அம்மா காளிதாயே
கொடியமகிஷாசுரனைக் கூறு போட்டவளே
அசுரக் குணம் யாவும் அழிக்கும் சுடர்க்கொடியே
சிவனை நினைத்தல்லோ சீர்விரதம் நீயிருந்தாய்
பரனை நினைத்தல்லோ பதிவிரதம் நீயிருந்தாய்
அரனை நினைத்தல்லோ அம்மாநீ நோன்பிருந்தாய்
சங்கரனை எண்ணியல்லோ சங்கரிநீ நோன்பிருந்தாய்
ஐங்கரனைப் பெற்றவளே அன்றுநீ நோன்பிருந்தாய்
விரதத்தைக் கண்டே விழித்தான் சிவனவனும்
அம்மா உமை அணைத்தே அருள்மாரி பொழிந்தானே
வகைபாற்றுப் படலமிதை வழிவழியாக் காட்டிடுவீர்
நெறியறியாத் திகைப்போர்க்கு நெறிமுறையைக் காட்டிடுவாய்
காப்பைப் புனைந்துவிடு காலபயம் ஓட்டிவிடு
நூலைப் புனைந்துவிடு நுண்ணறிவை ஊட்டிவிடு
வல்லமையைத் தந்துவிடு வையகத்தில் வாழவிடு
காளிமகா தேவியரே காப்பருளும் தேவியரே
காப்பைப் புனைபவளே காப்பாய் இருப்பவளே
நாடு செழிக்கவென்றே நற்காப்பு அருளுமம்மா
வீடு செழிக்கவென்றே விழைகாப்பு அருளுமம்மா
நல்வாழ்வு வாழ்வதற்கு நறுங்காப்பு அருளுமம்மா
அல்லல் அறுப்பதற்கே அருட்காப்பு அருளுமம்மா
பிள்ளை அற்றவர்க்குப் பெருங்காப்பு அருளுமம்மா
பூமணியே மாமணியே புனிதவதி தாயவளே
நான்விரும்பும் காப்பை நலமுடனே தாருமம்மா
கல்வி சிறப்பதற்குக் கலைமகளே வாருமம்மா
செல்வம் சிறப்பதற்குத் திருமகளே வாருமம்மா
வீரம் சிறப்பதற்கு வீரசக்தி தாருமம்மா
பாட்டுடைத் தேவியரே பராசக்தி தாயவளே!
ஏட்டுடைத் தலைவியரே எல்லாம்மிகு வல்லமையே
காப்பெடுக்க வந்தேனம்மா கனிவுடனே பாருமம்மா
பால்பழங்கள் வெற்றிலைகள் பல்வகைத் திரவியங்கள்
நானுனக்குத் தாறேனம்மா நயந்தென்னைக் காருமம்மா
காளிமகா தேவியரே காசினிக்கு வித்தவளே
வித்தை விதைப்பவளே வினைகாக்கும் காப்பவளே

என்நாள் வாழ்ந்திடுவோம் எல்லாம் உமதருளே
காசினியில் வேற்றுமையை கணபொழுதே மாற்றிவிட்டால்
ஏசலின்றி வாழ்ந்திடுவோம் ஏந்துபுகழ் தேவியளே
காப்பெனக்குப் போட்டுவிட்டால் கல்மனது இளகிவிடும்
ஞானம் பெருகிவரும் நல்வாழ்வு மிகுந்துவரும்
தொடர்ந்து அணிவோர்க்கு தொட்டதெல்லாம் ஜெயமாகும்
இசைந்து அணிவோர்க்கு நினைத்ததெல்லாம் ஈடேறும்
நம்பி அணிவோர்க்கு நல்லதெல்லாம் பெருகிவரும்
நாள்கள் கோள்களெல்லாம் நலமுடனே இணைந்துவரும்
சந்தனச் சாந்தவளே சங்கரியே சாந்தினியே
குங்குமப் பூச்சவளே குலக்கொழுந்தே கெளரியம்மா
காப்புக் கட்டிவிட்டுக் கடமை முடிந்ததென்று
ஏப்பம் மிகவிட்டு என்றுமே இருந்தறியேன்
நாளும் பொழுதிலெல்லாம் நறுங்காப்புக் கட்டதனில்
பூவும் நீருமிட்டுப் போற்றி வணங்கிடுவேன்
காலைப் பொழுதெழுந்து காப்பதனில் விழித்திடுவேன்
ஞானச் செழுஞ்சுடரே காளியுன்னைக் காணுகின்றேன்
காப்பெனக்குக் கையிலுண்டு கடமைகளைச் செய்திடுவேன்
ஏய்ப்பவரைக் கண்டால் எரிமலைபோற் கனன்றிடுவேன்
தீமைச் செயலெதுவும் தெரியாது செய்கையிலே
காப்புக் கையிலிருந்து கண்திறந்து காட்டுமடி
சொல்லற் கரிதான சோதிமிகு காப்பதனை
இருபது நாள்வரையில் இசைவோடு விரதமிரு
பக்தி மனதுடனே பரவி யணிவோர்க்கு
சித்தியெல்லாந்தருவாள் சீர்பெருகு கெளரியவள்
முத்திக்கு வழியுமுண்டு முக்கால உணர்வுமுண்டு
எச்சகத்தி லோர்களெல்லாம் ஏற்றியெமைப் போற்றிடுவர்
சொற்சக்தி பொருட்சக்தி துலங்கி வந்திடவே
அச்சக்தி எல்லாம் அருள்வாள் கெளரியவள்
கெளரிக் காப்பதனைக் காலம் தவறாமல்
முறையாய் அணிந்துவர முன்வினைகள் நீங்கிவர
ஞானம் ஓங்கிவர நல்லறிவு துலங்கிவர
தேவிமகா காளியரே தெவிட்டாத தீங்கனியே
காளியாய் வந்தமர்ந்த கெளரியே காப்பருளும்

முற்றும்.

# மனிதன் மனிதனாய் வாழ !

- நானே பெரியவன் நானே சிறந்தவன் என்ற அகந்தையை விடுங்கள் (Ego)
- அர்த்தமில்லாமலும் தேவையில்லாமலும் பின்விளைவு அறியாமலும் பேசிக்கொண்டேயிருப்பதை விட்டுவிடுங்கள் (Losse Takls)
- எந்த விஷயத்தையும் பிரச்சனையையும் நாசூக்காக கையாளுங்கள், (Diplomacy) விட்டுக்கொடுங்கள் (Compromise)
- சில நேரங்களில் சில சங்கடங்களைச் சகித்துத்தான் ஆக வேண்டும் என்று உணருங்கள் (Tolerance)
- நீங்கள் சொன்னதே சரி செய்ததே சரி என்று கடைசிவரை வாதாடாதீர்கள் (Adamant Argument)
- குறுகிய மனப்பான்மையை விட்டொழியுங்கள் (Narrow Mindedness)
- உண்மை எது பொய் எது என்று விசாரிக்காமல் இங்கே கேட்டதை அங்கே சொல்வதையும் அங்கே கேட்டதை இங்கே சொல்வதையும் விடுங்கள் (Carrying Tales)
- மற்றவர்களைவிட உங்களையே எப்போதும் உயர்த்தி நினைத்து கர்வப்படாதீர்கள் (Superiority Complex)
- அளவுக்கதிகமாய் தேவைக்கதிகமாய் ஆசைப்படாதீர்கள் (Over Expectation)
- எல்லோரிடத்திலும் எல்லா விஷயங்களையும் அவர்களுக்கு சம்பந்தம் உண்டோ இல்லையோ சொல்லிக் கொண்டிருக்காதீர்கள்.
- கேள்விப்படுகிற எல்லா விஷயங்களையும் நம்பிவிடாதீர்கள். அற்ப விஷயங்களை பெரிது படுத்தாதீர்கள்.
- உங்கள் கருத்துக்களில் உடும்புப்பிடியாப் இல்லாமல் கொஞ்சம் தளர்த்திக் கொள்ளுங்கள். (Flexibility)

- மற்றவர்கள் கருத்துக்களை செயல்களை நடக்கின்ற நிகழ்ச்சிகளைத் தவறாகப் புரிந்து கொள்ளாதீர்கள் (Misunderstanding)
- புன்முறுவல் காட்டவும், சிற்சில அன்புச் சொற்களைச் சொல்லவும் கூட நேரமில்லாதது போல் நடந்து கொள்ளாதீர்கள்.
- பேச்சிலும் நடத்தையிலும் பண்ணில்லாத வார்த்தைகளையும் தேவையில்லாத மிடுக்கையும் காட்டுவதைத் தவிர்த்து அடக்கத்தையும் பண்பையும் காட்டுங்கள்
- மற்றவர்களுக்கு உரிய மரியாதையைக் காட்டவும் இனிய இதமான சொற்களைப் பயன்படுத்தவும் தவறாதீர்கள். (Courtesy)
- அவ்வவ்போது நேரில் சந்தித்து மனம் திறந்து பேசுங்கள்
- பிரச்சனைகள் ஏற்படும்போது அடுத்தவர் முதலில் இறங்கி வரவேண்டும் என்று காத்திருக்காமல் நீங்களே பேச்சைத்துவக்க முன்வாருங்கள்.
- எப்போதும் எல்லோரிடத்திலும் அன்பு காட்டுங்கள்

## வாழ்வில் வெற்றி பெற

சுறுசுறுப்பாய் இரு ஆனால் படபடப்பாய் இராதே
பொறுமையாய் இரு ஆனால் சோம்பலாய் இராதே
சிக்கனமாய் இரு ஆனால் கருமியாய் இராதே
அன்பாய் இரு ஆனால் அடிமையாய் இராதே
இரக்கம் காட்டு ஆனால் ஏமாந்து போகாதே
கொடையாளியாக இரு ஆனால் ஆண்டியாகிவிடாதே
இல்லறத்தை நடத்துஆனால் காமவெறியனாகாதே
பற்றற்று இரு ஆனால் காட்டுக்குப் போய்விடாதே
வீரனாய் இரு ஆனால் போக்கிரியாய் இராதே
நல்லோரை நாடு ஆனால் அல்லோரை வெறுக்காதே

# உங்கள் சிந்தனைக்கு

| | |
|---|---|
| 1. மிகமிக நல்லநாள் | - இன்று |
| 2. மிகப்பெரிய வெகுமதி | - மன்னிப்பு |
| 3. மிகவும் வேண்டாதது | - வெறுப்பு |
| 4. மிகப்பெரிய தேவை | - சமயோசிதபுத்தி |
| 5. மிகவும் கொடிய நோய் | - பேராசை |
| 6. மிகவும் சுலபமானது | - குற்றங்காணல் |
| 7. கீழ்த்தரமான விடயம் | - பொறாமை |
| 8. நம்பக்கூடாதது | - வதந்தி |
| 9. ஆபத்தினை விளைவிப்பது | - அதிகபேச்சு |
| 10. செய்யக்கூடாதது | - உபதேசம் |
| 11. செய்ய வேண்டியது | - உதவி |
| 12. விலக்க வேண்டியது | - விவாதம் |
| 13. உயர்வுக்கு வழி | - உழைப்பு |
| 14. நழுவவிடக்கூடாதது | - வாய்ப்பு |
| 15. இளமையில் தேவை | - கல்வி |
| 16. உருகும் உள்ளத்தில் உதிப்பது | - அன்பு |
| 17. இறுகும் உள்ளத்தில் உதிப்பது | - அகந்தை |
| 18. அன்பு விளைவிப்பது | - ஒற்றுமை |
| 19. அகந்தை விளைவிப்பது | - வேற்றுமை |
| 20. வேற்றுமையில் விளைவது | - துன்பம் |
| 21. வருவதும் போவதும் | - இன்பம், துன்பம் |
| 22. வந்தால் போகாதவை | - அவமானம், பழி |
| 23. போனால் வராதவை | - மானம், உயிர் |
| 24. தானாக வருவது | - இளமை, முதுமை |
| 25. நம்முடன் வருவது | - பாவம், புண்ணியம் |
| 26. அடக்கமுடியாதது | - ஆசை, துக்கம் |
| 27. தவிர்க்க முடியாதது | - பசி, தாகம் |
| 28. நம்மால் பிரிக்க முடியாதது | - பாசம், பந்தம் |
| 29. அழிவைத் தருவது | - பொறாமை, கோபம் |
| 30. எல்லோருக்கும் சம்மந்தமானது | - இறப்பு, பிறப்பு |

# உலக தினங்கள்

| | |
|---|---|
| 1. உலக சகநோய் தடுப்பு தினம் | - பெப்ரவரி 25 |
| 2. உலக மகளிர் தினம் | - மார்ச் 8 |
| 3. உலக வன தினம் | - மார்ச் 21 |
| 4. உலக நீர் தினம் | - மார்ச் 22 |
| 5. உலக வானிலை தினம் | - மார்ச் 23 |
| 6. உலக நல்வாழ்வு தினம் | - ஏப்ரல் 7 |
| 7. உலக தொழிலாளர் தினம் | - மே 1 |
| 8. உலக பத்திரிகையாளர் தினம் | - மே 2 |
| 9. உலக செஞ்சிலுவை தினம் | - மே 8 |
| 10. உலக தொலைத்தொடர்பு நாள் | - மே 17 |
| 11. புகையிலை எதிர்ப்பு நாள் | - மே 31 |
| 12. உலக சுற்றுச்சூழல் தினம் | - யூன் 26 |
| 13. உலக நீரிழிவு தினம் | - யூன் 27 |
| 14. உலக சனத்தொகை தினம் | - யூலை 11 |
| 15. உலக எழுத்தறிவு தினம் | - செப்ரெம்பர் 8 |
| 16. சர்வதேச சிறுவர் தினம் | - ஒக்டோபர் 1 |
| 17. சர்வதேச ஆசிரியர் தினம் | - ஒக்டோபர் 6 |
| 18. உலக சுகாதார தினம் | - ஒக்டோபர் 10 |
| 19. சர்வதேச உணவு நாள் | - ஒக்டோபர் 16 |
| 19. சர்வதேச சேமிப்பு நாள் | - ஒக்டோபர் 30 |
| 20. உலக கடற்றொழில் நாள் | - நவம்பர் 21 |
| 21. உலக எயிட்ஸ் தினம் | - டிசம்பர் 1 |
| 22. உலக ஊனமுற்றோர் தினம் | - டிசம்பர் 2 |

# கல்வெட்டு எதற்காக?

ஒருவர் எங்களோடு இருக்கின்ற போது அவர் எங்களோடு இருக்கின்றார் என்ற திருப்தியோடு இருக்கின்றோம் இவர் நோய்வாய்ப்பட்டாலும் எங்களோடு இருக்கின்றார் என்ற திருப்தியோடு இருக்கின்றோம். காலத்தால் அவர் அமரத்துவம் அடைய நேர்ந்து விட்டால் அவர் அமரத்துவம் அடைந்தாலும் அவருடைய பொன்னுடல் எங்களோடு இருக்கின்றது என்ற திருப்தியோடு இருக்கின்றோம். பொன்னுடலையும் தகனம் செய்ய நேர்ந்து விட்டால் அவருடைய அஸ்தி எங்களோடு இருக்கின்றது என்ற திருப்தியோடு இருக்கின்றோம். அஸ்தியையும் வீட்டுக்கிருத்தியம், அந்தியேட்டி என்று சொல்லப்படும் கிரியைகளின் மூலம் இல்லாமல் செய்து விட்டால் எங்களிடம் எஞ்சியிருப்பது அவருடைய நினைவுகளைச் சுமந்து வருகின்ற நினைவு மலர் என்று சொல்லப்படுகின்ற கல்வெட்டேயாகும். அது மற்றவர்களுடைய தேவைகளை நிறைவேற்றுகின்றதோ இல்லையோ என்பதை விட சம்பந்தப்பட்டவர்களுக்கு அவருடைய இழந்துபோன ஸ்தானத்தை நிரப்பிக் கொடுக்கின்ற மிகப்பெரிய சாதனமாக இக்கல்வெட்டு என்பது இருக்கிறது என்பதே உண்மையாகும்.

கல்வெட்டு என்றால் அழியாமல் இருப்பது என்பதே பொருளாகும். எனவே நாங்கள் மறைந்து போனாலும் என்றும் மறையாமல் இருந்து இனி வருங்காலத்தவர்களுக்கும் ஒரு பரம்பரையின் வரலாற்றைக் கூறுகின்ற ஒரு ஆவணப் புத்தகமாகவும் இது அமைகின்றது. எனவே வாழ்ந்தவர்களுடைய வரலாறானது வாழ்பவர்களுக்கு ஒரு பாடமாக அமையும் என்பதால் சம்பந்தப்பட்டவர்கள் மாத்திரமன்றி எல்லோரும் அமரத்துவம் அடைந்துபோன ஒருவர் பற்றிக் கூறுகின்ற இக்கல்வெட்டிற்கு மதிப்பளித்துப் படித்துப் பாதுகாத்து இறைபதம் அடைந்த பொன்னு இரத்தினம் அவர்களின் நல்லாசிகளைப் பெறுவோமாக!

# நன்றி நவில்கின்றோம்


"எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
செய்நன்றி கொன்ற மகற்கு"

- திருக்குறள் -

அன்பின் திருவுருவாய் பண்பின் சிகரமாய் பாசத்தின் ஒளி விளக்காய் அறத்தின் வழி நின்று எங்கள் வாழ்வின் வழி காட்டியாய் திகழ்ந்து நெஞ்சில் நீங்காத நினைவுகளைத் தந்து ஆறாத்துயரில் ஆழ்த்தி மீளாத்துயில் கொள்ளும் எங்கள் அன்பு குடும்பத் தலைவர் **அமரர் பொன்னு இரத்தினம்** ஐயா அவர்கள் சிவபதம் எய்தியதை அறிந்து உடனுக்குடன் தங்களால் முடிந்த பல உதவிகளை செய்தவர்களுக்கும், அனுதாபங்களைத் தெரிவிக்க எமது இல்லங்களுக்கு நேரில் வருகை தந்தவர்களுக்கும் நாங்கள் துயரத்தில் இருக்கையில் மன ஆறுதல் கூறியோருக்கும், தங்கள் சிரமத்தையும் பாராது உணவுகளை தந்து உதவியோருக்கும் முகநூல், மின்னஞ்சல் மூலம் அனுதாப செய்தி அனுப்பியோருக்கும், எங்கள் ஆழ்ந்த துயர நேரத்தில் எமது வேலைகளில் பங்குகொண்டு பெரும் உதவி புரிந்தோருக்கும், இறுதிக்கிரியை, தகன மையம் ஆகியவற்றுக்கு வருகை தந்து மலர் வளையங்கள் வைத்தவர்களுக்கும் கண்ணீர் அஞ்சலி பிரசுரங்கள் வெளியிட்டவர்களுக்கும் மற்றும் அயலவர்கள், உறவினர்கள், நண்பர்களுக்கும் எங்கள் குடும்பத்தின் சார்பில் நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றோம்.

நன்றி

**இங்ஙனம்**
**குடும்பத்தினர்**




# வம்சாவழி

பொன்னு + பொன்னம்மா

- **இரத்தினம்**
  - கமலாவதி + வன்னியசிங்கம்
    - மீறுஜா + சதீஸ்
      - தீபிகா
      - ஷானிகா
      - சஸ்வின்
    - யதீசன் + லியானி
      - விஸ்மிகா
      - ஹரிசன்
    - நிசாந்தன் + துஷித்தா
      - தருணிகா
    - தேனுகா + செல்வநாயகம்
      - ஜெசிக்கா
  - கிருஷ்ணானந்தன் + ஜெயந்தினி
    - பவித்ரா
    - கோகுலன்
    - கோபிகன்
  - ரவீந்திரன்
  - இராஜேந்திரன் + வாசுகி
    - பிரதீப்
    - சுவேதா
- மயில்வாகனம் + சந்திரிக்கா
- பரமேஸ்வரி + பரமசாமி
- அன்னலட்சுமி + ஜெயந்திரா

பார்வதிப்பிள் + ஆறுமுகம்

## சாவழி



நாகநாதன் + சின்னத்தங்கம்
பார்வதிப்பிள்ளை + ஆறுமுகம்
பத்தினிப்பிள்ளை + ஆசைப்பிள்ளை
அன்னப்பிள்ளை + சின்னராசு
அன்னம்மா
இராஜேந்திரன் + வாசுகி
கமலேந்திரன் + நந்தினி
சுஜிகரன் + கிருஷாந்தி
பபிகரன்
ரஜிகரன் + சபறினா
தனுஜா + முகுந்தன்
பிரதீப்
சுவேதா
கௌதமன்
சுருதி
லக்ஷ்மன்
மதுஷா
விதுஷன்
பபிஷன்
அக்ஷயன்
சஷ்கியா
தலின்
மித்தின்
யதுஷா
கேஷிகா
அதிஷன்
அமரர்களை குறிக்கும்

# கீதாசாரம்



எது நடந்ததோ,
அது நன்றாகவே நடந்தது.
எது நடக்கிறதோ,
அது நன்றாகவே நடக்கிறது,
எது நடக்க இருக்கிறதோ,
அதுவும் நன்றாகவே நடக்கும்,
உன்னுடையதை எதை இழந்தாய்?
எதற்காக நீ அழுகிறாய்?
எதை நீ கொண்டு வந்தாய்?
அதை நீ இழப்பதற்கு.
எதை நீ படைத்திருந்தாய்,
அது வீணாவதற்கு.
எதை நீ எடுத்துக்கொண்டாயோ,
அது இங்கிருந்தே எடுக்கப்பட்டது.
எதைக் கொடுத்தாயோ
அது இங்கேயே கொடுக்கப்பட்டது.
எது இன்று உன்னுடையதோ,
அது நாளை மற்றவருடையதாகிறது,
மற்றொருநாள் அது வேறொருவருடையதாகும்."



இதுவே உலக நியதியும்,
எனது படைப்பின் சாரம்சமுமாகும்.

-பகவான் ஸ்ரீ கிருஷ்ணர்-

மெகா பதிப்பகம்
றக்கா வீதி, யாழ்ப்பாணம்
021 221 7939